RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 81 மார்ச்.30 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தேர்தல் பிரச்சாரத்தை மார்ச் 31ல் திருவாரூரில் தொடங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை: மார்ச்.30-

தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின், வரும் 31ம் தேதி மாலை 5 மணிக்கு திருவாரூரில் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார். திமுக தலைமைக் கழகம் இதனை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மு.க. ஸ்டாலின் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்க உள்ளார்.

இதற்கான தொடர் பிரச்சாரத்தை மார்ச் 31ம் தேதி திருவாரூரில் தொடங்க உள்ளார். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



மு.க. ஸ்டாலின், முதற்கட்டமாக திமுக முன்னாள் தலைவர் கருணாநிதியின் ஊரான திருவாரூரில் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

திருவாரூர் தெற்கு ரத வீதியில் மாலை 5 மணிக்கு இந்த பிரச்சார பொதுக்கூட்டம் தொடங்கும். திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வேட்பாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

இதனைத் தொடர்ந்து ஏப். 1ம் தேதி காலை 9 மணிக்கு திருச்சி உழவர் சந்தையில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்ற உள்ளார். இதில், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் ஆகிய தொகுதிகளின் சட்டமன்ற வேட்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு கரூர் பொதுக்கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்ற உள்ளார். இதில், அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளின் வேட்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.

ஏப். 2ம் தேதி காலை 9 மணிக்கு ஈரோட்டில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், மாலை 5 மணிக்கு கோவை பொதுக்கூட்டத்திலும் மு.க. ஸ்டாலின் உரை நிகழ்த்த உள்ளார்.

## சென்னையில் மீண்டும் போட்டியிட 6 எம்எல்ஏக்களுக்கு வாய்ப்பு மறுப்பு : திமுக தலைமை நடவடிக்கை

சென்னை, மார்ச்.30-

சென்னையில் 6 எம்எல்ஏக்களுக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு மறுத்து திமுக தலைமை நடவடிக்கை எடுத்துள்ளது. நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை கட்சியின் தலைவர் ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.



இந்த வேட்பாளர் பட்டியலானது, கட்சியில் பெரும் பாலானவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளது. முக்கிய அமைச்சர்கள், நிர்வாகிகள் அனைவருமே தங்கள் தொகுதிகளில் மீண்டும் களமிறங்கியுள்ளனர். அதனுடன் அதிகளவிலான புதுமுகங்களுக்கும், இளைஞர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக, கட்சியில் உதயநிதியின் செல்வாக்கு உயர்ந்துள்ளதை அறிய முடிகிறது. அதேநேரம் சிட்டிங் எம்எல்ஏக்கள் பலருக்கும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. குறிப்பாக, தலைநகரான சென்னையில் மொத்தமுள்ள 16 தொகுதிகளில் கடந்த முறையை போல் திமுக தற்போதும் 15ல் போட்டியிடுகிறது. இதில் நடப்பு எம்எல்ஏக்கள் தி.நகர் கருணாநிதி, அண்ணாநகர் மோகன், ராயபுரம் ஐட்ரீம் மூர்த்தி, வில்லிவாக்கம் வெற்றியழகன், திரு.வி.க. நகர தாயகம் கவி, எழும்பூர் பரந்தாமன் ஆகிய 6 பேருக்கு மீண்டும் வாய்ப்பு தரப்படவில்லை. அவர்களுக்கு பதிலாக புதுமுகங்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தவெகவின் போட்டியை சமாளிக்கும் வகையில் சென்னை மாவட்டத்தில் வேட்பாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர். அதன்படி, சென்னை எழும்பூரில் தமிழன் பிரசன்னா, அண்ணா நகரில் சிற்றரசு, தி.நகரில் ராஜா அன்பழகன், ராயபுரத்தில் சுபேர்கான், திருவிக நகரில் முன்னாள் எம்எல்ஏ ரவிசந்திரன் ஆகியோர் களமிறங்கியுள்ளனர்.

திமுகவின் மூத்த தலைவராக இருந்த பேராசிரியர் அன்பழகனின் பேரன் வெற்றியழகனுக்கும் இந்த முறை வில்லிவாக்கத்தில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அங்கு ஆதவ் அர்ஜுனா போட்டியிட இருப்பதால் உதயநிதிக்கு நெருக்கமான கார்த்திக் களமிறக்கப்பட்டுள்ளார். அதேபோல், விஜய் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படும் பெரம்பூர் தொகுதியில், 3 வது முறையாக ஆர்.டி.சேகர் போட்டியிடுகிறார். திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 10 தொகுதிகளில் பொன்னேரி, திருத்தணி, திருவொற்றியூர் தவிர்த்து 7 தொகுதிகளில் திமுக போட்டியிடுகிறது.

இதில் அம்பத்தூர் எம்எல்ஏ சாமுவேல் ஜோசப் மட்டும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அவருக்கு பதிலாக பூர்ணிமாவுக்கு தரப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் தவிர மீதமுள்ள 2 தொகுதி களில் திமுக களம் காண்கிறது. இதில் காஞ்சிபுரம் எம்எல்ஏ எழிலரசன் மாற்றப்பட்டு, நித்யா சுகுமாருக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

அதேபோல், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளில் திருப்போரூர் செய்யூர் தவிர 5 தொகுதிகளில் திமுக போட்டியிடுகிறது. இதில் தாம்பரம் எம்எல்ஏ எஸ்.ஆர். ராஜா. செங்கல்பட்டு எம்எல்ஏ வரலட்சுமி ஆகியோருக்கு மீண்டும் வாய்ப்பு தரப்படவில்லை. அவர்களுக்கு பதிலாக கிருத்திக் தண்டபாணி (செங்கல்பட்டு) போட்டியிடுகின்றனர். மேலும், கடந்த முறை கூட்டணி கட்சியிடம் இருந்த மதுராந்தம் (தனி) தொகுதியில் இந்த முறை திமுக சார்பில் அமுலு பொன்மலர் களம் இறக்கப்பட்டுள்ளார்.

## "எனக்கும் ஸ்டாலினுக்கும் இடையே தான் போட்டி" வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் விஜய் பேச்சு

சென்னை: மார்ச்.30-

"இந்த தேர்தல் இருமுனைப் போட்டி மட்டும்தான். மக்கள் கூட்டணியான நமக்கும், ஸ்டாலின் கூட்டணிக்கும் இடையேதான் போட்டி. இது விஜய்க்கும், ஸ்டாலினுக்கும் இடையே நடக்கும் தேர்தல்" என தவெக வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் விஜய் பேசினார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் இன்று நடந்த நிகழ்ச்சியில், தவெகவின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு, அக்கட்சியின் வேட்பாளர்களையும் அறிமுகப்படுத்தினார் விஜய்.

பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய் போட்டியிடுகிறார். தி.நகரில் புஸ்ஸி ஆனந்த், மயிலாப்பூரில் வெங்கட்ரமணன், வில்லிவாக்கத்தில் ஆதவ் அர்ஜுனா, கோபிசெட்டிப்பாளையத்தில் செங்கோட்டையன், திருச்செங்கோட்டில் அருண்ராஜ், திருப்பரங்குன்றத்தில் நிர்மல்குமார், எழும்பூர் தொகுதியில் ராஜ்மோகன், ஆர்.கே.நகரில் மரிய வில்சன், குமாரபாளையத்தில் விஜயலெட்சுமி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.



இந்த நிகழ்ச்சியில் பேசிய விஜய், "இது வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம் அல்ல, மக்களுக்கான காப்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம். நமது வேட்பாளர்கள் சாதாரண பின்புலத்தில் இருந்த வந்தவர்கள் என சொல்லுவார்கள். ஒரு எம்எல்ஏ எப்படி இருக்க வேண்டும் என்றால், அனுபவத்தை வைத்து கொள்ளையடிக்காதவராக, சட்டவிரோத மணல் குவாரி வைத்திருக்காதவராக, கேள்வி கேட்கும் பத்திரிகையாளர்கள் தாக்காதவராக இருக்க வேண்டும்.

எனவே, மக்களுடன் நிற்கும் வேட்பாளர்களை நான் தேர்ந்தெடுத்து உங்கள் முன் அறிமுகப்படுத்துகிறேன். அவர்களை எம்எல்ஏ ஆக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. இந்த தேர்தல் இருமுனைப் போட்டி மட்டும்தான். மக்கள் கூட்டணியான நமக்கும், ஸ்டாலின் கூட்டணிக்கும் இடையேதான் போட்டி. அது ஒரு ஒட்டுப்போட்ட கூட்டணி. எனவே உங்கள் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் விசில் சின்னத்தில் வாக்களிப்பீர்.

இது பாமரர்களுக்கும், ஒரு அதிகார வர்க்கத்துக்கு சேவகம் அடிமைகளுக்கும் நடக்கும் தேர்தல். இது விஜய்க்கும், ஸ்டாலினுக்கும் இடையே நடக்கும் தேர்தல். இந்த தேர்தல் மன்னராட்சியில் இருந்து மக்களாட்சியை மீட்பதற்கான தேர்தல். தமிழகத்தின் எதிர்காலத்துக்காக எங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்.

இளைஞர்களுக்காக தேர்தல் வாக்குறுதிகளை அறிவிக்கிறேன். போதைப்பொருள் இல்லாத மாநிலமாக மாற்ற சமூக காவல் உள்ளிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி, கல்லூரிகளில் மன்றம் உருவாக்கப்படும். கல்லூரி படிப்புக்கு ரூ.20 லட்சம் பிணையில்லா கடன் வழங்கப்படும்.

அரசு வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்த நிலையான ஆள்சேர்ப்பு அட்டவணை உருவாக்கப்படும். 25 வயதுக்கு மேலும் வேலைவாய்ப்பு கிடைப்பது தாமதமானால் பட்டபடிப்பு படித்தோருக்கு மாதந்தோறும் ரூ.4000 மற்றும் டிப்ளமோ படித்தோருக்கு ரூ.2500 வழங்கப்படும். இளைஞரை தொழில்முனைவோர்களாக உருவாக்க ரூ.25 லட்சம் பிணையில்லா கடன் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் தமிழகத்தை சேர்ந்தவருக்கே பணி வழங்க, தனியார் நிறுவனங்களில் 75% தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும். இளைஞர்களின் பிரச்சினை குறித்து அரசுக்கு தெரிவிக்க இளைஞர் ஆலோசனைக்குழு அமைக்கப்படும். இந்த தேர்தல் நான்கு முனைப் போட்டி இல்லை. இத்தேர்தல் இரு முனைப் போட்டிதான். இது மக்கள் விரோத திமுகவுக்கும், மக்கள் ஆதரவு பெற்ற தவெகவுக்கும் இடையே நடக்கும் தேர்தல்" என்றார்.

## 'பழநி தொகுதி கட்டாயம் வேண்டும்' : எல்.முருகனை முற்றுகையிட்டு பாஜகவினர் வாக்குவாதம்

பழநி: மார்ச்.30-

தே.ஜ.கூட்டணியில் பழநி தொகுதியை பாஜகவிற்கு ஒதுக்காததை கண்டித்து, பழநி வந்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகனை, நிர்வாகிகள், தொண்டர்கள் ஆவேசத்துடன் முற்றுகையிட்டதால் பரபரப்பு நிலவியது.



சட்டப்பேரவை தேர்தலில் இம்முறை பழநி தொகுதி பாஜகவிற்கு ஒதுக்கப்படுமென தொண்டர்களும், நிர்வாகிகளும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். நம்பிக்கையோடு தேர்தல் பணிகளையும் தொடங்கினர். இந்நிலையில் பழநி தொகுதி, அதிமுகவுக்கு ஒதுக்கப்பட்டது. இதனால் அதிருப்தி அடைந்த நிர்வாகிகள், தொண்டர்கள் நேற்று முன்தினம் (மார்ச் 27) பழநி தொகுதியை பாஜகவிற்கு ஒதுக்கக் கோரி, தேங்காய் உடைத்தும், கட்சி அலுவலகம் முன்பு சாலையில் அமர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, இளைஞரணி நிர்வாகி சதீஷ் (38) கட்சி அலுவலக மாடியில் ஏறி நின்று தற்கொலை மிரட்டல் விடுத்தார். இதனையடுத்து, தொண்டர்களின் கோரிக்கை குறித்து மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் நல்ல அறிவிப்பு வரும். எனவே, போராட்டத்தை கைவிட வேண்டும் என நிர்வாகிகள் அறிவுறுத்தினர். இதையடுத்து, தொண்டர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இந்நிலையில் நேற்று (மார்ச் 28) பழநி வந்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பழநி அடிவாரத்தில் உள்ள புலிப்பாணி ஆசிரமத்தில் சிறப்பு யாகம் நடத்தினார். பின்னர், மலைக்கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை புலிப்பாணி ஆசிரமத்துக்கு வந்தார். அவரை ஆசிரமத்தில் வைத்து சந்திக்க கட்சியினர் முயன்றனர். ஆனால், தான் தங்கியிருக்கும் விடுதியில் வைத்து அனைவரையும் சந்திப்பதாகவும், தற்போது கலைந்து செல்லுமாறும் எல்.முருகன் கூறினார்.

அதை ஏற்க மறுத்து, அவருக்காக ஆசிரமத்துக்கு வெளியே கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் காத்திருந்தனர். ஆசிரமத்தில் இருந்து வெளியே வந்த அவரை, நிர்வாகிகள் முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். 'பழநி தொகுதி பாஜகவிற்கு ஒதுக்கப்படும் என்ற நம்பிக்கையில் 2 ஆண்டுகளாக பணியாற்றி வந்தோம். திடீரென அதிமுகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. பழநி தொகுதியை பாஜகவிற்கு ஒதுக்க வேண்டும். எங்களுக்கு முடிவு தெரியாமல் உங்களை இங்கிருந்து அனுப்ப முடியாது என்று நிர்வாகிகள் கூறினர்.

அதற்கு எல்.முருகன்,' தொகுதி ஒதுக்கீடு செய்தது கட்சி மேலிடம் தான். உங்கள் கோரிக்கையை மேலிடத்தில் சொல்லி பழநி தொகுதியை பாஜவிற்கு ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன்' என்று கூறிவிட்டு, காரில் ஏறிச் செல்ல முயன்றார். ஆனால், அவர் காரை மறித்து, தரையில் அமர்ந்து தொண்டர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, பழநி தொகுதியை ஒதுக்கவில்லையெனில் எங்களுக்கு கட்சி பதவியும் வேண்டாம், கட்சியும் வேண்டாம். எப்படியாவது பழநி தொகுதியை வாங்கித்தர வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். போராட்டத்துக்கு நடுவே கோபமாக காரில் காத்திருந்த எல்.முருகன் , நிர்வாகிகள் சிலரை அழைத்து, தொகுதி ஒதுக்குவது தொடர்பாக பேசலாம் என்று சொல்லியும் கோயில் என்று பார்க்காமல் போராட்டத்தில் ஈடுபடுவது நல்லதல்ல. இப்படி நடந்து கொள்வது சரியா? என்று கண்டித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்திய மேற்கு மாவட்ட தலைவர் ஜெயக்குமார், மத்திய இணை அமைச்சர் பழநி தொகுதியை பாஜகவிற்கு வாங்கித்தருவதாக கூறியுள்ளார். நிச்சயம் நல்ல பதில் கிடைக்கும்.

அதனால் போராட்டத்தை கைவிட்டு, அவர் செல்ல வழி விடுங்கள், என்று கெஞ்சிக் கேட்டு கொண்டார். இதையடுத்து, போராட்டத்தை கைவிட்டு தொண்டர்கள், நிர்வாகிகள் கலைந்து சென்றனர்.

அதன்பின்னர், காரில் புறப்பட்ட எல்.முருகன், நிர்வாகிகள், தொண்டர்களை பார்க்காமல் இருப்பதற்காக கார் கண்ணாடியை ஏற்றிவிட்டபடி சென்றார். மத்திய இணை அமைச்சரை, சொந்த கட்சியினரே முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பழநியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே, இந்தப் போராட்டத்தால் அதிமுகவுக்கு ஒதுக்கப்பட்ட பழநி தொகுதி பாஜகவிற்கு கைமாறி விடுமோ என்று ஒருவித அச்சத்தில் பழநி அதிமுகவினர் உள்ளனர்.

## சிபிஐ வேட்பாளர் பட்டியல் வெளியீடு தளி தொகுதியில் மீண்டும் ராமச்சந்திரன்

சென்னை: மார்ச்.30-

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் 5 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை அறிவித்து வருகின்றன. இந்த வரிசையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் ஐந்து தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பட்டியல்:

1.தளி டி.ராமச்சந்திரன்

2.திருத்துறைப்பூண்டி (தனி) மாரிமுத்து

3.திருவில்லிபுத்தூர் (தனி) பி.மகாலிங்கம்

4.திருப்பூர் வடக்கு ரவி

5.பவானிசாகர் (தனி) பி.எல்.சுந்தரம்

இவர்களில் தளி தொகுதியில் போட்டியிடும் ராமச்சந்திரன் மற்றும் திருத்துறைப்பூண்டியில் போட்டியிடும் மாரிமுத்து ஆகியோர் 2021 தேர்தலில் சிபிஐ சார்பில் வெற்றி பெற்றவர்கள். தற்போது மக்கள் பிரதிநிதிகளாக உள்ள அவர்களுக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கி உள்ளது சிபிஐ. ரவி, பி.எல்.சுந்தரம் ஆகியோர் கடந்த தேர்தலில் போட்டியிட்டு இருந்தனர். அவர்களுக்கும் அக்கட்சி மீண்டும் வாய்ப்பு வழங்கி உள்ளது.




# கீழக்கோட்டையில் பள்ளி ஆண்டு விழா

காளையார்கோவில் மார்ச்.30-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் பள்ளி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. காளையார்கோவில் ஒன்றிய வட்டாரக் கல்வி அலுவலர் பொன்னி தலைமை வகித்தார். ஆசிரியர் பயிற்றுநர் ஜோதிமணி முன்னிலை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்துகில் அணிவிக்கப்பட்டு புத்தகம் நினைவுப்பரிசாக வழங்கப்பட்டன. தலைமையாசிரியை தெய்வானை ஆண்டறிக்கை வாசித்தார். பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டன. கல்வி விளையாட்டு பள்ளிக்கு 100 சதவீத வருகை பெற்ற மாணவ மாணவிகளுக்கு பதக்கங்களும் பரிசுகளும் புத்தகங்களும் வழங்கப்பட்டு பாராட்டப் பெற்றனர். துளிர்



திறனறிதல் தேர்வில் தேர்வு எழுதிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர். மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் யோகா பிரமிடு ஆடல் பாடல்கள் தமிழ் பேச்சு ஆங்கில உரையாடல் நீரின் அவசியம் குறித்த நாடகம் பழமொழி உரையாடல் தமிழோடு பேசுதல் கரகாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் மாணவ மாணவிகள் சிறப்பாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். பள்ளி மேலாண்மைக்குழு தலைவி நித்யா பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி வசந்தமலர் வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா நன்கொடையாளர் தொழிலதிபர் சண்முக சுந்தரம் வாழ்த்துரை வழங்கினர். 20262027 ஆம் கல்வியாண்டில் புதிதாக சேர்ந்த ஒன்றாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு மாலை அணிவித்தும் பொன்துயில் அணிவித்தும் சிறப்பிக்கப்பட்டனர். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். முன்னாள் பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் பெரியோர்கள் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா ஆசிரியைகள் கமலம்பாய் வாசுகி ஆசிரியர் பயிற்றுநர் வித்யா நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். காலை சிற்றுண்டி பணியாளர் பஞ்சவர்ணம் சத்துணவு அமைப்பாளர் சுமதி உதவியாளர்கள் அஞ்சலை கஸ்தூரி கலந்துகொண்டு சிறப்பித்தனர்.நிமீ



# கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதிக்கு திமுக வேட்பாளர் மதியழகன் அறிவிப்பு: கிருஷ்ணகிரியில் திமுகவினர் கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி,மார்ச்.30-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திமுக தனது இரண்டாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கான திமுக வேட்பாளராக, கட்சியின் கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி நகர திமுக சார்பில் உற்சாகக் கொண்டாட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி ஆகியோர் தலைமையில், கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே பொதுமக்களுக்கும், கட்சி தொண்டர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் வி சி மகேந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ குன்னம் சட்டமன்றத் தொகுதியில் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பினை மீண்டும் சா.சி சிவசங்கர் ஆகிய எனக்கு வழங்கிய திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வெற்றி வேட்பாளர் சா.சி.சிவசங்கர் நன்றியினைத் தெரிவித்து, வாழ்த்துகளைப் பெற்றார்





# ஊரை காலி செய்து திருப்பதி நோக்கி ஆன்மீகப் பயணம்

## காவேரிப்பட்டணம் அருகே 2000 பேர் பங்கேற்பு

கிருஷ்ணகிரி , மார்ச்.,30-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சுண்டேகுப்பம் ஊராட்சி செட்டிமாரம்பட்டி கிராமத்தில் சுமார் 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், முன்னோர்கள் வழக்கப்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை விரதமிருந்து குடும்பத்துடன் திருப்பதி திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோவில் செல்லும் ஆன்மீக நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன்படி செட்டிமாரம்பட்டி, கவுண்டர் கொட்டாய், குரும்பர் தெரு, முனிசிப்பு கொட்டாய், புளியந்தோப்பு, கிருஷ்ணன் கொட்டாய், கோவிந்தாபுரம், தோட்டிபாறை, கல்குட்டை, பட்டன் நகர், காதர்கான் கொட்டாப், போயர் தெரு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் 20க்கும் மேற்பட்ட பேருந்துகள் மற்றும் 10 கார்களில் குடும்பத்துடன் புறப்பட்டனர். ஊர் பாதுகாப்பு கருதி முன்னோர்கள் வழக்கப்படி, இரண்டு நபர்கள் ஊர் எல்லையில் கையில் கம்புடன் காவலுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் காவேரிப்பட்டணம் காவல் நிலையத்திலும் பாதுகாப்பு கோரி தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து காவலில் இருந்த கிராமத்தினர் கூறுகையில், "முன்னோர்கள் கடைப்பிடித்த இந்த ஆன்மீக பயணத்தை நாங்களும் தொடர்கிறோம். இவ்வாறு கோவிலுக்கு சென்றால் நல்ல மழை பெய்யும், விவசாயம் செழிக்கும், நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது" என்றனர்.



# குருத்தோலை ஞாயிறு: கிருஷ்ணகிரியில் சிறப்பு பவனி - திரளான கிறிஸ்தவர்கள் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மார்ச் 30:

கிறிஸ்தவ மதத்தின் முக்கிய திருநாளான Palm Sunday (குருத்தோலை ஞாயிறு) தினத்தையொட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் உள்ள தேவாலயங்களில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் குருத்தோலை பவனிகள் நடைபெற்றன. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் பக்தியுடன் கலந்து கொண்டனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசுநாதர் எருசலேம் நகருக்கு கழுதை மீது அமர்ந்து வருகை தந்தபோது, இஸ்ராயேல் மக்கள் அவரை தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொண்டு, ஒலிவ மரக் கிளைகளை ஏந்தியபடி "உன்னதங்களின் ஓசாண்ணாஞ் ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசீர்பெற்றவர்" எனப் புகழ்ந்து வரவேற்றனர். அந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் குருத்தோலை ஞாயிறு அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு, இன்று கிருஷ்ணகிரி பழையபேட்டையில் அமைந்துள்ள புனித இஞ்ஞியாசியார் ஆலயத்தில் இருந்து குருத்தோலை பவனி துவங்கியது. இந்த பவனி காந்தி சிலை, தர்மராஜா கோவில் தெரு வழியாக சென்று புனித பாத்திமா அன்னை திருத்தலத்தை வந்தடைந்தது. பவனியில் பங்கேற்ற கிறிஸ்தவர்கள் கைகளில் குருத்தோலைகளை ஏந்தியபடி "உன்னதங்களின் ஓசாண்ணா" எனத் தூதிப்பாடல்கள் பாடி இறைநம்பிக்கையை வெளிப்படுத்தினர். பின்னர், தருமபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இதேபோல் ஓசூர், பர்கூர், ஊத்தங்கரை, கந்திகுப்பம், எலத்தகிரி உள்ளிட்ட பகுதிகளிலும் உள்ள தேவாலயங்களில் குருத்தோலை பவனிகள் மற்றும் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்று, கிறிஸ்தவர்கள் ஆன்மீக உற்சாகத்துடன் திருநாளை கொண்டாடினர்.





# காளையார்கோவிலில் குருத்தோலை பவனி

சிவகங்கை, மார்ச்.,30-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் ஆலயத்தில் குருத்து ஞாயிறு கூட்டு திருப்பலி நடைபெற்றது. முன்னதாக சகாயராணி மல்டி ஸ்பெஷால்டி மருத்துவமனை வளாகத்திலிருந்து அருள்தந்தை ஜான்பீட்டர் பங்குத்தந்தை சேசு உதவி பங்குத்தந்தை நிக்கோலாஸ் தலைமையில் குருத்தோலைகளை இறைமக்கள் கையிலேந்தி பவனியாக ஆலயம் வந்தடைந்தனர்.

# பிரதமரை வரவேற்கும் பட்டியலில் அண்ணாமலை பெயரும் இருந்தது; அவர்தான் வரவில்லை

## வானதி சீனிவாசன் பேட்டி

கோவை, மார்ச்.,30-

பிரதமரை வரவேற்கும் பட்டியலில் அண்ணாமலை பெயரும் இருந்தது; அவர்தான் வரவில்லை என்று வானதி சீனிவாசன் பேட்டி அளித்துள்ளார். யாருக்கு எப்போது எந்த பதவி கொடுக்க வேண்டும் என்பது கட்சி தலைமைக்கு தெரியும். கட்சியில் 5 ஆண்டு வேலை செய்தவருக்கு ஒரு ஆசை இருக்கத்தான் செய்யும்




# கிருஷ்ணகிரி தொகுதியில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி இருளர் குடியிருப்புகளில் வீடு தோறும் பிரசாரம்

கிருஷ்ணகிரி, மார்ச் 30:

கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் ஆலப்பட்டி உள்வட்டத்திற்குட்பட்ட பெல்லாரம்பள்ளி தரப்பு பச்சிகானப்பள்ளி ஊராட்சி, கொத்துப்பள்ளி கிராமத்தில் உள்ள இருளர் இன மக்கள் வாழும் பகுதியில், இன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி மற்றும் பிரசாரம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், வருவாய்க் கோட்டாட்சியருமான ஷாஜகான் தலைமையேற்றார். உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும், வட்டாட்சியருமான ரமேஷ் முன்னிலையில் நடைபெற்ற இந்த பேரணியில், மண்டல துணை வட்டாட்சியர் மகேஸ்வரி, ஆலப்பட்டி உள்வட்ட வருவாய் ஆய்வாளர் சீனிவாசன், பெல்லாரம்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் வெங்கடேசன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் கிராம உதவியாளர்கள் கலந்து கொண்டனர். பேரணியின் போது, அதிகாரிகள் கிராம பொதுமக்களின் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தி, வாக்காளர்களுக்கு அழைப்பிதழ்களை வழங்கினர். தேர்தலில் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

# சிவகங்கை முத்துப்பட்டியைச் சேர்ந்த ஜெயசீலன் ஐடி விங் மாநில பொதுச் செயலாளராக நியமனம்

சிவகங்கை மார்ச் .30-



தமிழ் நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் சமூக ஊடகப் பணிகளை திறம்படச் செயலாற்றிட புதிய நிர்வாகிகளை மாநில பொதுச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்... மொத்தமுள்ள நால்வரில் சிவகங்கை மாவட்டம் அரசனி முத்துப்பட்டியைச் சேர்ந்த இளவயது ம.ஜெயசீலன் என்பவரை தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகத் காங்கிரஸ் கட்சி ஊடகத் துறையின் மாநில பொதுச் செயலாளராக காங்கிரஸ் கட்சி தகவல் தொழில்நுட்ப அணித் தலைவர் நபில் அஹமது நியமனம் செய்ய உத்தரவிட்டுள்ளார்... இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி ஐடி விங் நிர்வாகிகள் சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்த வண்ணம் உள்ளனர்...




■ சிவகங்கை மாவட்டம் 187மானாமதுரை தொகுதிக்குட்பட்ட இளையான்குடியில் நேற்று தேர்தல் விழிப்புணர்வு நடைபெற்றது. அதிகாரிகள் தலைமையில் கண்மாய்க் கரை முதல் வால்மேல் நடந்த அம்மன் கோவில் வரை பேரணி நடந்தது. சாலை, சூராணம் கிராமங்களில் 100% வாக்களிப்பு அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது என வருவாய் ஆய்வாளர் தெரிவித்தார்

# புழல் சிறையில் கைதிகள் தகராறில் பிளேடால் முகம் கிழிப்பு




புழல், மார்ச்.,30-
சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் தண்டனை, விசாரணை மற்றும் மகளிர் என 3 பிரிவுகளிலும் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். யில் தண்டனை, விசாரணை, மகளிர் என 3 பிரிவுகளில் சுமார் 4000க்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதில், சென்னை அரும்பாக்கத்தை சேர்ந்த இம்மானுவேல் (33) என்பவர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, கடந்த மாதம் 25ம் தேதி முதல் விசாரணை பிரிவில் அடைக்கப்பட்டு உள்ளார். இதே பிரிவில், ஆவடியை சேர்ந்த சந்துரு (22) என்பவரும் திருட்டு வழக்கில் கைதாகி அடைக்கப்பட்டு உள்ளார். இந்நிலையில், நேற்றிரவு விசாரணை பிரிவில் ஒரே அறைக்குள் அடைக்கப்பட்டு இருந்த இம்மானுவேல், சந்துரு என்ற 2 கைதிகளுக்கு இடையே வாய்த்தகராறு முற்றியதில் கைகலப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதில் ஆத்திரமான சந்துரு, முகச்சவரம் செய்யும் பிளேடால் இம்மானுவேலின் முகத்தில் சரமாரி கிழித்துள்ளார். இதில் அவரது வலது பக்க கன்னத்தில் பலத்த வெட்டுகளுடன் ரத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் வலியால் அலறி துடித்துள்ளார். அவரது அலறல் சத்தம் சிறைக் காவலர்கள் ஓடிவந்தனர். அங்கு முகத்தில் படுகாயம் அடைந்த கைதி இம்மானுவேலை மீட்டு, சிறை மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் அவரை சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இப்புகாரின்பேரில் புழல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். இதனால் புழல் சிறை வளாகத்தில் பரபரப்பு நிலவியது

# சிவகங்கை தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு பெற ப.சிதம்பரம் தீவிர முயற்சி: மாநில பொதுச்செயலாளர் சி.ஆர். சுந்தரராஜன்பேட்டி



சிவகங்கைமார்ச்.30-
மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணி சார்பில் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சிவகங்கை தொகுதியை மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்க மூத்த தலைவர் ப.சிதம்பரம் தொடர்ந்து முயற்சி எடுத்து வருவதாக காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளர் சி.ஆர். சுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தொகுதி ஒதுக்கீடு சர்ச்சை:

நடப்புத் தேர்தலில் சிவகங்கை தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் என்றும், அதில் மாநில பொதுச்செயலாளர் சி.ஆர். சுந்தரராஜன் போட்டியிடுவார் என்றும் அக்கட்சியினர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், முக்குலத்தோர் புலிப்படை தலைவர் நடிகர் கருணாஸ், உதயசூரியன் சின்னத்தில் இத்தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிப்பு வெளியானது. இது காங்கிரஸ் தொண்டர்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியது.

ப.சிதம்பரம் முயற்சி:

இது குறித்து பச்சேரியில் உள்ள தனது இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்த சி.ஆர். சுந்தரராஜன் கூறியதாவது:

› "சிவகங்கை தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு பெற்றிட கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் மற்றும் சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் ஆகியோர் தொடர்ந்து மேலிடத்தில் வலியுறுத்தி வருகின்றனர். இறுதி நேரத்தில் இத்தொகுதி மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன."

›

கூட்டணி தர்மம்:

மேலும் அவர் பேசுகையில், ஒருவேளை தொகுதி ஒதுக்கப்படாவிட்டாலும் கூட்டணி தர்மத்தை மதித்து செயல்படுவோம் என்று உறுதி அளித்தார். "திமுக தலைவர் ஸ்டாலின் அறிவிக்கும் வேட்பாளர் யாராக இருந்தாலும், அவருக்கு ஆதரவாக தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டு வெற்றிபெறச் செய்வோம். தமிழகம் முழுவதும் தற்போது திமுக கூட்டணிக்கு ஆதரவான அலை வீசி வருவதால், 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்போம்" என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தேமுதிக, மதிமுக வேட்பாளர்கள் வாழ்த்து பெற்றனர்



சென்னை, மார்ச்.,30-
சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை இன்று காலை நேரில் சந்தித்து தேமுதிக, மதிமுக வேட்பாளர்கள் வாழ்த்து பெற்றனர். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் மதிமுக இடம் பெற்றுள்ளது. அந்த கட்சிக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 3 இடத்தில் உதயசூரியன் சின்னத்திலும், ஒரு இடத்தில் தனிச்சின்னத்திலும் மதிமுக போட்டியிடுகிறது. அதாவது மொடக்குறிச்சி, மதுரை தெற்கு, கடையநல்லூர் தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்திலும், சீர்காழி (தனி) தொகுதியில் தனிச் சின்னத்திலும் மதிமுக களம் காண்கிறது. அதன்படி, கடையநல்லூர் தி.மு.ராஜேந்திரன், மொடக்குறிச்சி செந்தில் நாதன், மதுரை தெற்கு பூமிநாதன், சீர்காழி (தனி) செந்தில் செல்வன் ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடுவார் என்று கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நேற்று அறிவித்துள்ளார். இந்த நிலையில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இன்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினார். அப்போது முதன்மை செயலாளர் துரை வைகோ உடன் இருந்தார். தொடர்ந்து மதிமுக வேட்பாளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றனர். முன்னதாக வைகோ, துரை வைகோ ஆகியோர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். அதே போல திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேமுதிகவிற்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் விருத்தாசலம் தொகுதியில் கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்துக்கும், விருதுநகர் தொகுதியில் விஜயகாந்த் மகன் விஜயபிரபாகரனும் போட்டியிடுகின்றனர். மேலும் தர்மபுரி இளங்கோவன், சேலம் மேற்கு அழாகபுரம் மோகன்ராஜ், ஓமலூர் இளங்கோவன், மயிலம் வெங்கடேசன், பல்லாவரம் அனகை.முருகேசன், திருத்தணி கிருஷ்ண மூர்த்தி, குடியாத்தம் (தனி) பிரதாப், போளூர் சரவணன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இவர்களும் இன்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்



# திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் சோனியா நலம்பெற சிறப்பு பிரார்த்தனை

திருவள்ளூர், மார்ச்.,30-
அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் விரைவில் நலம்பெற வேண்டி வில்லிவாக்கம் வட்டார பொறுப்பாளர் அன்புக்கரசன் ஏற்பாட்டில் திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில், மாவட்ட தலைவர் காங்கை குமார் தலைமையில் வீராபுரத்தில் உள்ள பரிசுத்த நற்கருணை முதியோர் இல்லத்தில் இறைவனை பிரார்த்தனை செய்து அன்னதானம் செய்தனர். தமிழ்நாடு அரசியல் அப்போது காங்கை குமார் கூறும்போது, ''பசித்தோருக்கு உணவளிப்பது என்பது சாதாரண செயல் அல்ல, அது மிக உயர்ந்த தர்மம். அந்த தர்மத்தின் பலன் நமது அன்னை சோனியா காந்தி நலமாக திரும்பி வர வேண்டும். நாம் அளிக்கும் இந்த உணவு, நம் அன்பின் அடையாளம், நம் பிரார்த்தனையின் ஒரு வடிவம், இறைவன் கருணை கொண்டு அவர்களுக்கு விரைவில் முழு உடல்நலன் பெற்று மீண்டும் மக்களுக்காக சேவை செய்யும் வலிமையையும் உறுதியையும் வழங்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒரே மனதுடன் ஒரு வேண்டுதல் விடுப்போம். நம் அன்னை விரைவில் நலம்பெற வேண்டும்'' என்றார். இதில், மாநில செயலாளர் தரணிபாய், வட்டார, நகர தலைவர்கள் வில்லிவாக்கம் சுப்புலட்சுமி, எல்லாபுரம் நந்தகோபால், திருவள்ளூர் விநாயகம், செங்குன்றம் பாயாஸ், மாத்தூர் அருண்குமார், கோதண்டன், அரண் கலையரசன், பாஸ்கர் நேதாஜி, கோபி, ரோஸ், ஆனந்தன், பச்சையப்பாஸ் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ஒன்றிய அமைச்சர் காரை பாஜவினர் முற்றுகை: பழநியில் பரபரப்பு

பழநி, மார்சச்.,30-
பழநி தொகுதியை பாஜவுக்கு ஒதுக்காத அதிருப்தியில் அக்கட்சியினர் ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகனை இன்று முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. திண்டுக்கல் மாவட்டம், பழநி தொகுதியில் அதிமுகவை சேர்ந்த ரவி மனோகரன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இது, உள்ளூர் பாஜகவினரிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. பழநி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள புலிப்பாணி ஆசிரமத்தில் உலக நலன் வேண்டி சிறப்பு யாகம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள பாஜவை சேர்ந்த ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் நேற்று மாலை வந்தார். ஆனால், அவரை பாஜ நிர்வாகிகள் சந்திக்காமல் புறக்கணித்தனர். இந்நிலையில், பழநி தண்டாயுதபாணி கோயிலில் அமைச்சர் எல்.முருகன் இன்று காலை சாமி தரிசனம் செய்தார். பின்னர், கோயிலில் இருந்து வெளியே வந்த அவரது காரை பாஜவினர் திடீரென முற்றுகையிட்டனர். பழநி தொகுதியை பாஜவிற்கு ஒதுக்க வேண்டும், இல்லையெனில் சட்டமன்ற தேர்தல் பணியை புறக்கணிப்பதுடன், பாஜகவில் இருந்தே விலக உள்ளதாகவும் கூறி முழக்கமிட்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. கட்சியினரிடம் எல்.முருகன் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர், அங்கிருந்து காரில் புறப்பட்டு சென்றார்

# குவைத் துறைமுகம் மீது ஈரான் தாக்குதல் அமெரிக்க வீரர்கள் பலர் உயிரிழப்பு?



டெஹ்ரான், மார்ச்.,30-
குவைத் நாட்டின் சுவைக் துறைமுகத்தில், அமெரிக்க கடற்படையின் 6 சிறியரக கப்பல்கள் மீது ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடியாக 'ஆபரேசன் ட்ரூ பிராமிஸ்' என்ற பெயரில் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. குவைத் நாட்டின் சுவைக் துறைமுகம் மீது நேற்று கதிர் 389 ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. 1,000 கி.மீ தூரம் சென்று தாக்கும் இந்த ஏவுகணை, அமெரிக்க கடற்படையின் 6 சிறிய ரக கப்பல்களை தகர்த்ததாக கூறப்படுகிறது. இந்த கப்பல்கள் கடற்கரையில் வீரர்களை தரையிறக்கும் வசதி கொண்டவை. இவற்றில் 3 கப்பல்கள் மூழ்கி விட்டதாகவும், 3 கப்பல்கள் தீப்பற்றி எரிவதாகவும் ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. இதை அமெரிக்கா இன்னும் உறுதி செய்யவில்லை. மேலும், குவைத்தில் அல் கார்ஜ் என்ற இடத்தில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், எரிபொருள் நிரப்பும் வாகனங்கள் பல சேதம் அடைந்ததாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது.

போர் விமானம் மீது..

ஈரான் நாட்டின் ஃபார்ஸ் மாகாணத்தில் நேற்று தாக்குதல் நடத்த வந்த அமெரிக்க விமானப்படையின் எப்16 போர் விமானத்தின் மீது தாக்குதல் நடத்தியதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. அதேபோல், துபாயில் அமெரிக்க ராணுவத்தின் ட்ரோன் பிரிவினர் தங்கியிருந்த இடம், துபாய் ஓட்டல் ஒன்றின் மீதும் 'கமிக்காசி' என்ற ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியதாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. இங்கு 500க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவத்தினர் தங்கியிருந்தனர். இதில் காயம் அடைந்த அமெரிக்க வீரர்கள் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் துபாய் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. குவைத் சர்வதேச விமான நிலையம் மீது ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் விமான நிலைய ரேடார் சேதம் அடைந்ததாகவும் ஈரான் ராணுவம் கூறியுள்ளது. இதை குவைத் விமான போக்குவரத்து செய்தி தொடர்பாளர் உறுதி செய்துள்ளார். ஈரான் போர் காரணமாக வளைகுடா நாடுகளில் ஏற்கெனவே விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. விமான நிறுவனங்கள் ஏராளமான பயணங்களை ரத்து செய்துள்ளன. இதனால் சர்வதேச விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது

# குருத்தோலைஞாயிறுகொண்டாட்டம்பவனியாகச்சென்றகிறிஸ்தவர்கள்



சென்னை, மார்ச்.,30-
குருத்தோலை ஞாயிற்றுக்கிழமையையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் குருத்தோலை பவனியும் சிறப்பு ஆராதனையும் நடைபெற்றன. யேசு கிறிஸ்து சிலுவையில் அறைந்து கொல்லப்படுவதற்கு முன்பாக ஜெருசலேம் நகரின் வீதிகளின் வழியாக கோவேறு கழுதை மீது அமர்த்தப்பட்டு பவனியாக அழைத்துச் செல்லப்பட்டதை நினைவுகூறும் வகையில் உலகம் முழுவதும் புனித வாரத்தின் தொடக்க தினமான ஞாயிற்றுக்கிழமை குருத்தோலை ஞாயிறாக கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் புனித வாரத்தின் தொடக்க தினமான இன்று (ஞாயிறு) குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்பட்டது. இதையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் காலை குருத்தோலை பவனியும், அதைத்தொடர்ந்து சிறப்பு ஆராதனைகளும் நடைபெற்றன. பவனியில் பங்கேற்ற இறைமக்கள் கைகளில் குருத்தோலையை உயர்த்தி பிடித்தவாறு "ஓசானா தாவீதின் புதல்வா" என்ற பாடலைப் பாடியபடி ஆலயத்தை ஒட்டியுள்ள வீதிகளில் பவனியாகச் சென்றனர். தேசிய திருத்தலமான சாந்தோம் பேராலயத்தில் அதிபர் வின்சென்ட் சின்னதுரை தலைமையில் புனித ரபேல் மேல்நிலைப்பள்ளி அருகே இருந்து ஆலயம் நோக்கி நடைபெற்ற குருத்தோலை பவனியிலும் தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு திருப்பலியிலும் ஏராளமான கிறிஸ்தவர்கள் குருத்தோலையுடன் கலந்துகொண்டனர். இதேபோல், சென்னை மயிலாப்பூர் லஸ் சர்ச், ராயப்பேட்டை காணிக்கை அன்னை ஆலயம், பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி ஆலயம், எழும்பூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலம், புதுப்பேட்டை அந்தோணியார் ஆலயம், பாரிமுனை தூய மரியன்னை பேராலயம் உள்ளிட்ட கத்தோலிக்க தேவாலயங்களிலும் சிஎஸ்ஐ திருமண்டல தலைமை ஆலயமான கதீட்ரல் பேராலயம், வேப்பேரி புனித அந்திரேயா ஆலயம், மயிலாப்பூர் நல்மேய்ப்பர் ஆலயம், ராயப்பேட்டை வெஸ்லி ஆலயம், எழும்பூர் புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் உள்ளிட்ட சிஎஸ்ஐ ஆலயங்களிலும் குருத்தோலை பவனியும், சிறப்பு ஆராதனையும் நடைபெற்றன. சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் குருத்து ஞாயிறு கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை அமலஉற்பஅன்னை ஆலயம், தாம்பரம் பாத்திமா அன்னை ஆலயம், சேலையூர் புனித மாற்கு ஆலயம், பெருங்களத்தூர் குழந்தை யேசு ஆலயம், ஊரப்பாக்கம் ஆரோக்கிய அன்னை ஆலயம், கூடுவாஞ்சேரி நல்மேய்ப்பர் ஆலயம், ரயில்நகர் புனித அந்தோணியார் ஆலயம், பேரமனூர் எம்டிசி நகர் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களில் நடைபெற்ற குருத்தோலை பவனியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். மறைமலைநகர் தூய விண்ணரசி அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அலெக்சிஸ் மனோகர் தலைமையில் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இருந்து குருத்தோலை பவனி தொடங்கி திருவள்ளுவர் சாலை, பாவேந்தர் சாலை வழியாக ஆலயத்தை சென்றடைந்தது. பின்னர் சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. காட்டாங்குளத்தூர் லூர்து அன்னை ஆலயத்தில் அருட்தந்தை அருள்ராஜ், அருட்தந்தை மாணிக்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற குருத்தோலை பவனியிலும் தொடர்ந்து நடந்த சிறப்பு திருப்பலியிலும் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# "லாக்டவுனுக்கு வாய்ப்பு இல்லை" அசாம் மாநிலத்தில் அமித் ஷா பேச்சு



குவஹாட்டி, மார்ச்.,30-

லாக்டவுனுக்கு வாய்ப்பு இல்லை என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். அசாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர் தனியார் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: "லாக்டவுனுக்கு வாய்ப்பு இல்லை. தேசம் முழுவதும் நிலைமை சீராக உள்ளது. மற்ற நாடுகளில் இப்படி இல்லை. சர்வதேச அளவில் எரிபொருள் சார்ந்த நெருக்கடி நிலை எழுந்துள்ளது. பிலிப்பைன்ஸில் தேசிய அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எரிபொருள் விற்பனையில் 8 லிட்டர் என்ற வரம்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தில் வீட்டில் இருந்து பணியாற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வியட்நாமில் விமான இயக்க எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது, பாகிஸ்தானில் வாரத்துக்கு நான்கு நாட்கள் மட்டுமே பணி என அறிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் இப்படி இருக்கும் சூழலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. நமது பிரச்சினைகளை நாம் தான் எதிர்கொள்ள வேண்டும். அந்த வகையில் பெட்ரோல், டீசல் மாதிரியான எரிபொருள் மற்றும் எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு நாட்டில் இல்லை. வழக்கம் போலவே சந்தையில் அதன் விநியோகம் உள்ளது. தேசம் முழுவதும் அதை உறுதி செய்து வருகிறோம். அதற்கான பணியை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். உலக நாடுகளில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் மட்டுமே பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை. கலால் வரியை குறைத்து சுமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. உலகில் வேறு எந்த நாடும் இதை செய்யவில்லை" என அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் போர் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் வர்த்தக சிலிண்டர் விநியோகம் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது அது 70 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வீட்டு தேவைகளுக்கான எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தில் வாடிக்கையாளர் முன்பதிவு செய்வதில் சில கட்டுப்பாடுகள் அமலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கோவையில் 'சீட்' கிடைக்காமல் அதிமுக பிரமுகர்கள் ஏமாற்றம் தேர்தல் முடிவுகளில் எதிரொலிக்குமா?



கோவை, மார்ச்.,30-

அதிமுக சார்பில், கோவையிலுள்ள சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிட பழையவர்களுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர், மாவட்ட செயலாளர் உள்ளிட்டோருக்கு சீட் மறுக்கப்பட்டுள்ளது பேசு பொருளாகி உள்ளது. அதிமுகவில் 'சீட்' மறுக்கப்பட்டோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவர் முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுச்சாமி. 2001 06 காலத்தில் அதிமுக ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். 2011 சட்ட சபைத் தேர்தலில் சூலூர் தொகுதியில் அதிமுக வேட்பாளராக இவர் அறிவிக்கப்பட்ட நிலையில், கூட்டணியில் இணைந்த தேமுதிகவுக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டதால் போட்டியிடும் வாய்ப்பை இழந்தார். இதனைத் தொடர்ந்து 2011ல் கோவை மேயர் பதவியையும், மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் பதவியையும் இவருக்கு ஜெயலலிதா வழங்கினார். பின்னர், 2014 ல் சில காரணங்களால் மேயர் பதவி, கட்சிப் பதவி பறிக்கப்பட்டு கட்சியில் ஓரம்கட்டப்பட்டார். ஜெயலலிதா மறைவிற்கு பின், 2019ல் நடந்த சூலூர் இடைத்தேர்தலில் தனக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்த்த செ.ம.வேலுசாமிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. தொடர்ந்து 2021 சட்டப் பேரவைத் தேர்தலிலும் இவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் விரக்தியில் இருந்தவருக்கு, கட்சியின் அமைப்பு செயலாளர் பதவி வழங்கி பொதுச்செயலாளர் பழனிசாமி நம்பிக்கை ஊட்டினார். இதனால் மீண்டும் சட்டப்பேரவைத் தேர்தலில் வாய்ப்பு கிடைக்கும் என செ.ம.வேலுசாமி எதிர்பார்த் திருந்தார். இம்முறை சூலூர் அல்லது பல்லடம் தொகுதி தனக்கு நிச்சயம் ஒதுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த நிலையில், எஸ்.பி.வேலுமணியின் ஆசி இல்லாததால் வேட்பாளர் பட்டியலில் இவரது பெயர் இடம்பெற வில்லை. இதனால் செ.ம.வேலுசாமியின் ஆதரவாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

அதேபோல், மேட்டுப்பாளையம் தொகுதி சிட்டிங் எம்எல்ஏ வான ஏ.கே.செல்வராஜ். ஜெயலலிதா ஆட்சியில் அமைச்சராகவும், ராஜ்ய சபா எம்பியாகவும் இருந்தவர். ஈரோட்டில் செங்கோட்டையன் விலகியபோது, அவர் வகித்த ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட பொறுப்பாளராக ஏ.கே.செல்வராஜ் நியமிக்கப்பட்டார். மேட்டுப்பாளையம் அல்லது ஈரோடு மாவட்டத்தில் ஒரு தொகுதியை எதிர்பார்த்து இருந்த இவருக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு நெருக்கமான அதிமுக எம்.ஜி.ஆர். இளைஞரணி மாநில இணைச் செயலாளர் வடவள்ளி சந்திர சேகர், சில மாதங்கள் மனக் கசப்பின் காரணமாக கட்சியில் இருந்து விலகி யிருந்தார். அதன் பின் மீண்டும் கட்சியில் இணைந்த அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்து போயுள்ளது. கோவையில் ஏதாவது ஒரு தொகுதியை எதிர்பார்த்த மாநகராட்சி எதிர்கட்சித் தலைவர் பிரபாகரனுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது. சிட்டிங் எம்எல்ஏவும், மாஜி அமைச்சருமான செ.தாமோதரனுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதால் கிணத்துக் கடவில் 'சீட்' எதிர்பார்த்திருந்த மாஜி எம்எல்ஏ எட்டிமடை சண்முகம் உள்ளிட்டோரும் ஏமாற்றமடைந்துள்ளனர். மடத்துக்குளம் தொகுதி கூட்டணிக்கு ஒதுக்கப்பட்டதால், அங்குள்ள சிட்டிங் அதிமுக எம்எல்ஏ மகேந்திரனுக்கு 'சீட்' ஒதுக்கப்படவில்லை. தொகுதியை எதிர்பார்த்திருந்த நீலகிரி மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்துக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு, முன்னாள் எம்எல்ஏ சாந்திராமுவுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதிமுக நிர்வாகிகள் கூறும்போது, "மறைந்த முதல்வர் ஜெயலலிதா இருந்திருந்தால் ஒவ்வொரு தேர்தலிலும் அதிக தொகுதிகளில் புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கும். ஆனால், தற்போது சிட்டிங் எம்எல்ஏ உள்ளிட்ட சிலருக்கு மட்டுமே தொடர்ச்சியாக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இது கட்சி நிர்வாகிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி இருந்தாலும், தேர்தல் நெருங்கும் போது கசப்புகளை மறந்து தேர்தல் பணியில் தீவிரமாகி விடுவோம் என்றனர்.

# ட்ரம்ப் மோடி பேச்சில் எலான் மஸ்க் பங்கேற்கவில்லை: வெளியுறவுத் துறை விளக்கம்



புதுடெல்லி, மார்ச்.,30-

ஈரான் போர் நிலவரம் குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடி இடையே நடைபெற்ற தொலைபேசி பேச்சின் போது, அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க் பங்கேற்றார் என்று வெளியான தகவலை மத்திய வெளியுறவுத் துறை மறுத்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடியுடன் கடந்த 24ம் தேதி தொலைபேசியில் பேசினார். இருவரும் ஈரான் போர் நிலவரம் குறித்து பேசினர். இதுகுறித்து எக்ஸ் தளத்தில் கருத்து தெரிவித்த பிரதமர் மோடி, "மேற்காசிய நிலவரம் குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப், என்னுடன் தொலைபேசியில் பேசினார். இப்பகுதியில் விரைவில் அமைதி ஏற்பட வேண்டும், ஹார்முஸ் ஜலசந்தி திறந்து விடப்பட வேண்டும் என இந்தியா விரும்புவதாக தெரிவித்தேன். இப்பகுதியில் அமைதி மற்றும் நிலைத்தன்மை ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டோம்" என கருத்து தெரிவித்திருந்தார். இதுகுறித்து நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட தகவலில், "ஈரான் போர் நிலவரம் குறித்து அதிபர் ட்ரம்ப், பிரதமர் மோடி இடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் போது, தொழிலதிபர் எலான் மஸ்க்கும் பங்கேற்றார். போர் நிலவரம் குறித்து இருநாட்டு தலைவர்கள் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில், தனியார் நபர் பங்கேற்பது வழக்கத்துக்கு மாறானது" என்று தெரிவித்திருந்தது. இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் நேற்று கூறுகையில், "இந்தக் கதையை நாங்கள் பார்த்தோம். கடந்த 24ம் தேதி பிரதமர் மோடி மற்றும் அதிபர் ட்ரம்ப் இருவர் மட்டும்தான் தொலைபேசியில் பேசினர். அப்போது வேறு யாரும் இடம்பெறவில்லை" என்றார்.

# மே.வங்க தேர்தலில் மம்தாவுக்கு இணையாக முக்கியத்துவம் பெறும் மருமகன் அபிஷேக்



புதுடெல்லி, மார்ச்.30-

மேற்கு வங்கத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸின் (டிஎம்சி) இளைஞர் பிரிவு தலைவராக இருப்பவர் அபிஷேக் பானர்ஜி. மக்களவை எம்.பி.யான இவரை முதல்வர் மம்தா தனது வாரிசாக முன்னிறுத்தி வருகிறார். இதனால் கட்சியில் மம்தாவுக்கு அடுத்த நிலை தலைவராக அபிஷேக் முன்னிறுத்தப்படுகிறார். இந்நிலையில் 2026 தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் மம்தாவுக்கு இணையான தலைவராக அபிஷேக் உருவெடுத்துள்ளார். இருவரின் ஒருங்கிணைந்த தலைமை, மேற்கு வங்க அரசியலில் ஒரு தனித்துவமான அரசியல் நிலையை உருவாக்கியுள்ளது. முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக அபிஷேக் மாறி வருகிறார். இது, மாநில தேர்தல் அரசியலில் மம்தாவின் மருமகன் அபிஷேக்கின் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது. சுமார் 34 ஆண்டுகள் தொடர்ந்த ஆட்சி செய்த இடதுசாரி கட்சிகளுக்கு பின் டிஎம்சி ஆட்சிக்கு வந்தது. அப்போது டிஎம்சியில் உறுப்பினரான அபிஷேக், கடந்த 2021 சட்டப்பேரவை மற்றும் மக்களவை தேர்தல்களின் போதும் தீவிரப் பங்கு வகித்திருந்தார். இருப்பினும், தற்போதைய பிரச்சாரத்தில் மம்தா அபிஷேக் இடையே காணப்படும் ஒருங்கிணைப்பின் அளவு இதுவரை இல்லாத வகையில் உள்ளது. கடந்த 2014 மக்களவைத் தேர்தலில் கொல்கத்தாவின் டைமண்ட் ஹார்பர் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.யானார் அபிஷேக். அப்போது முதல் அதே தொகுதியில் எம்.பி.யாக வென்று வருகிறார். இம்மாநிலத்தில் பாஜக முக்கிய எதிர்க்கட்சியாக படிப்படியாக உருவெடுத்துள்ளது. இந்த தேர்தலில் பாஜக தனது அரசியல் ஆக்ரோஷத்தை கடுமையாக வெளிப்படுத்தி வருகிறது. இந்த வகை அரசியல் கடந்த நான்கு தசாப்தங்களாக மேற்கு வங்கத்தில் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. எனவே, தற்போதைய சட்டப்பேரவை தேர்தல், டிஎம்சி மற்றும் பாஜக இடையே கடுமையானபோட்டியை ஏற்படுத்தி உள்ளது

# அமெரிக்க ராணுவத்தை அனுமதிக்க கூடாது

## வளைகுடா நாடுகளுக்கு ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் அறிவுறுத்தல்

டெஹ்ரான், மார்ச்.,30-

பாதுகாப்பு, அமைதி மற்றும் வளர்ச்சியை விரும்பினால், அமெரிக்க ராணுவம் தங்கள் நாட்டில் இருந்து செயல்பட வளைகுடா நாடுகள் அனுமதிக்க கூடாது என ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் கூறியுள்ளார். ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த மாதம் 28ம் தேதி போர் தொடுத்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் ஈரான், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் மையங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இங்கிருந்து அமெரிக்க போர் விமானங்கள் புறப்பட்டு சென்று ஈரான் மீது தாக்குதல் நடத்துகின்றன.

துபாயில் தாக்குதல்: ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க ராணுவத்துக்கு உதவியாக, ட்ரோன் எதிர்ப்பு ஆயுதங்களை உக்ரைன் வழங்கியுள்ளது. இந்த ஆயுதங்கள் துபாயில் உள்ள ஒரு கிடங்கில் வைக்கப்பட்டிருந்தன. அந்த இடத்தை தாக்குதல் நடத்தி அழித்துள்ளதாக ஈரான் ராணுவ தலைமையகம் கதம் அல்அன்பியா கூறியுள்ளது. மேலும், துபாயில் பதுங்கியுள்ள அமெரிக்க ராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான் வெளியிட்டுள்ள செய்தியில், "பாதுகாப்பு, அமைதி மற்றும் வளர்ச்சியை விரும்பினால், அமெரிக்க ராணுவம் தங்கள் நாட்டில் இருந்து செயல்பட வளைகுடா நாடுகள் அனுமதிக்க கூடாது. நாங்கள் எப்போதும் முதலில் தாக்குதல் நடத்துவதில்லை. ஆனால், எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், பதிலடி கொடுப்போம்" என தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு நம்பிக்கை தேவை: ஈரான் அமெரிக்கா இடையே சமரச பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக சவுதி அரேபியா, எகிப்து, மற்றும் துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் பாகிஸ்தானில் இன்றும் நாளையும் ஆலோசனை நடத்துகின்றனர். இதை வரவேற்றுள்ள ஈரான் அதிபர் மசூத் பெஸ்கியான், பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப்பிடம் பேசுகையில், "போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்கா வுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நம்பிக்கை தேவை" என கூறியுள்ளார்

# கோயிலில் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் மோதல்

## புகைப்பட கலைஞர்களை தாக்கிய 7 பேர் கைது



பெங்களூரு, மார்ச்.,30-

கர்நாடகாவில் கோயிலில் புகைப்படக் கலைஞர்கள் காலணி அணிந்து திருமணத்துக்காகப் புகைப்படம் எடுத்ததால் 7 பேர் கொண்ட கும்பலால் தாக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார் 7 பேரையும் கைது செய்தனர். கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் சக்லேஷ்பூரில் பெட்டத பைரேஸ்வரா கோயில் உள்ளது. அங்கு நேற்று புகைப்படக் கலைஞர்கள் நவி (27), நந்தன் (25) ஆகியோர் புது மணத் தம்பதியினரைப் புகைப்படம் எடுப்பதற்காக வந்தனர். அப்போது நவியும், நந்தனும் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் பக்தர்கள் கோபமடைந்தனர். இருவரையும் கோயிலுக்கு வெளியே காலணிகளைக் கழற்றி விட்டு வருமாறு கூறியுள்ளனர். இதில் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் கோபமடைந்த உள்ளூர் இளைஞர்கள் 10க்கும் மேற்பட்டோர் நவி, நந்தனை கடுமையாக தாக்கினர். மேலும் அவர்களின் கேமராக்களைப் பறித்து கீழே போட்டு உடைத்தனர். இதனால் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. இதுகுறித்து தகவலறிந்த போலீஸார் காயமடைந்த புகைப்படக் கலைஞர்களை மீட்டு, மருத்துவமனையில் அனுமதித்தனர். இருவரும் அளித்த புகாரின் பேரில் 7 பேரை கைது செய்தனர்

# மதுரை மத்திய தொகுதியில் சுந்தர்.சி போட்டியால் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு 'டஃப்'

மதுரை, மார்ச்.,30-

மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் புதிய நீதிக்கட்சி சார்பில் திரைப்பட இயக்குநரும், நடிகருமான சுந்தர்.சி இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். அதிமுக போட்டியிடவில்லை என்று வருத்தத்தில் இருந்த அக்கட்சியினருக்கு சுந்தர்.சி போட்டியிடுவது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மதுரை மத்திய தொகுதியில் 2016, 2021 தேர்தல்களில் போட்டியிட்டு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெற்றி பெற்றுள்ளார். 2016ம் ஆண்டு அதிமுக வேட்பாளர் பேராசிரியர் ஜெயபாலம் வெறும் 5,762 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். 2021ம் ஆண்டு அதிமுக போட்டியிடாமல் கூட்டணிக்கு ஒதுக்கப்பட்டதால், பழனிவேல் தியாகராஜன் எளிதாக வெற்றி பெற்றார். இந்த முறை என்டிஏ கூட்டணியில் இந்த தொகுதி எதிர்பாராதவிதமாக ஏ.சி.சண்முகத்தின் புதிய நீதிக்கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அதனால், மீண்டும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கே இந்த தொகுதி சாதகமாக மாறியதாக கூறப்பட்டது. இந்நிலையில், புதிய நீதிக்கட்சியில் மதுரை மத்திய தொகுதியில் திடீரென சுந்தர்.சி வேட்பாளராக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தொகுதி விஜபி அந்தஸ்தை பெற்றுள்ளது. அதிமுக வேட்பாளர்கள் 17 பேர் அறிவிப்பு: 3ம் கட்ட பட்டியல் வெ அவர் தங்கள் கட்சி சின்னத்தில் போட்டியிடுவதால் அதிமுகவினரும் சுணக்கமின்றி வேலை செய்வர் என்பதால், இத்தொகுதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அதிமுகவினர் கூறுகையில், சினிமா பிரபலமான சுந்தர்.சி நடிகை குஷ்புவின் கணவர் என்பதால், இருவரின் பிரச்சாரம் இயல்பாகவே வாக்காளர்களிடம் கவனம் பெறும் வெற்றிக்காக சுந்தர் சியும் தேர்தல் பணிகளில் தாராளம் காட்டுவார் என்பதால், கட்சியினரும் மத்திய தொகுதியில் முஸ்லிம்கள் அதிகம் நடிகை குஷ்பு அச்சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது பிரச்சாரம் எடுபட வாய்ப்புள்ளது. சுந்தர்.சிக்காக அவரது ஆதரவு நடிகர், நடிகைகள் மற்றும் அதிமுக ஆதரவு நடிகர் பட்டாளம் களமிறங்கும். அதனால், தேர்தல் முடியும் வரை, மதுரை மத்திய தொகுதி மாநில அளவில் கவனம் பெறும்' என்றனர்.

வேட்பாளரானது எப்படி ?: ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சுந்தர்.சி, 37க்கும் அதிகமான படங்களை இயக்கி உள்ளார். 15க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவரது படங்களில் பெரும்பாலும் காமெடி குடும்ப பாங்கான ஜனரஞ்சகமான கதைகளுக்கு தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும். முறைமாமன் படத்தை இயக்கியபோது, அதில் நடித்த குஷ்புவை காதலித்து திருமணம் செய்தார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். குஷ்பு தற்போது பாஜகவில் இருக்கிறார். சுந்தர்.சி எந்த கட்சியிலும் இல்லை ஆனால் ஏ.சி.சண்முகத்துடன் இணைந்து படங்களை தயாரித்து வந்த நிலையில் அவருக்காக சுந்தர்.சியும், குஷ்புவும் பிரச்சாரம் செய்திருந்தனர். மதுரையில் கடந்த பிப்.22ம் தேதி குடியரசு துணைத் தலைவர் சி.பி ராதா கிருஷ்ணன் தலைமையில் நடந்த வ.உ.சி. சிலை அடிக்கல் நாட்டு விழாவில் சுந்தர்.சி கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161